கடற்கரை கவியரங்கு எண் – 632

நாள் **03-12-2023**



# வாழ்வியல் தன்னை உணர்ந்திடுவோம்!

கண்களில் நல்லன்பைக் காட்டிடுவோம்!
கருணையாய் மனிதம் போற்றிடுவோம்!
இருளில்லா மனதைக் கொண்டிடுவோம்!
இறைமையின் உண்மை அறிந்திடுவோம்!

இயந்திரமாகும் வாழ்வினை நீக்கிடுவோம்!
இன்னல்கள் நீங்கிட நம் மனமெழுவோம்!
அன்பிற்கு இம்மண்ணில் இணையேது?
துன்பங்கள் நீங்கிடும் மன பலத்தால்!

துயரமது பின்தொடர்ந்திட வழியேது?
இயல்பாய் மனத்தை செதுக்கிடுவோம்!
இன்னல்கள் இன்றி வாழ்ந்திடுவோம்!
இயன்நிலைசூடும் அறிவே சுகமாகும்!

பயன் தனை நோக்கா கல்விகொண்டு,
பண்பினில் நம்நிலை காத்திடுவோம்!
பக்குவம் கொண்ட நல்அறிவேதான்,
பண்பினில் உயர்வினைக் கண்டிடுமே!

மண்பதை யாவுக்கும் உரிமையுண்டு!
மன்னும்நிலை வரைச் சமஉரிமை!
மனமே நீதான் இதனை அறியாயோ!
மனிதருக்கும் மட்டும் உரிமையில்லை!

மரணம் வரையிலும் போராட்டம்!
அரணாய்த் தன்னைக் காத்திடவே!
அடுத்து உயிர்கள் பிழைத்திடவும்,
அழித்தே உண்டிடும் ஒன்றையொன்று!

அன்பால் உலகை அளந்திட்டால்,
அடுத்து நமக்கும் துன்பமில்லை!
ஒன்றையொன்றுச் சார்ந்திருக்கும்,
உன்னதமான மண்ணின் வாழ்வியல்தான்!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**

02-12-2023 (இரவு 11.30)